**<u>செய்தி வெளியீடு:</u> 76** **நாள்:14.08.2020**

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு.பன்வாரிலால் புரோகித் அவர்களின் சுதந்திர தின வாழ்த்துச் செய்தி**

இந்தியத் திருநாட்டின் மகிழ்ச்சிகரமான 74வது சுதந்திர நன்னாளில், தமிழக மக்கள் அனைவரும் நல் ஆரோக்கியம், பிரகாசமான எதிர்காலத்தைப் பெற்றிட இதயம் நிறைந்த வணக்கத்தையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய இந்தியா, நாடுகளிடையே பரஸ்பர நல்லிணக்கத்தை உருவாக்குவதில் பெருமையுடன் முன்னணியில் அணிவகுத்து நிற்கிறது. நம் தேசமானது சுயசார்புடையது, அதே வேளையில், அதன் அரசியல் தலைமை, பொருளாதார வளர்ச்சி, ஆழ்ந்த கலாச்சார வேர்கள் மற்றும் சமூக ஒத்திசைவுக்காக உலகம் முழுவதிலும் நன்கு மதிக்கப்படுகிறது.

இத்தருணத்தில், பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து நம் நாடு சுதந்திரம் அடைவதற்கு அரும்பாடுபட்டு, தியாகம் செய்திட்ட வீரம் நிறைந்த நம் நாட்டின் ஆத்துமாக்கள் அனைவருக்கும் நமது அஞ்சலியை காணிக்கையாக்கிடுவோமாக! நமது நாட்டை வளர்ச்சிப் பாதையில் முன்னேறச் செய்திட்ட அனைவருக்கும் நமது நன்றியை வெளிப்படுத்திடுவோம்.

இனிய இந்த சுதந்திர நன்னாளில், உண்மையான அர்ப்பணிப்புடனும், சேவை மனப்பபான்மையுடனும் நாட்டின் வளர்ச்சிக்காக நம்முடைய ஒருங்கிணைந்த ஆற்றல் அனைத்தையும் முழுமையாக அர்ப்பணித்திட உறுதி எடுத்துக் கொள்வோமாக! நம் தேசபக்தி, நம் எண்ணங்களை நிரப்புவதோடு, நம் மக்கள் மீதான கரிசனம், அக்கறை நம் இதயங்களில் ஆதிக்கம் செலுத்திட வாழ்த்துகின்றேன்.

**பன்வாரிலால் புரோகித்**

**தமிழ்நாடு ஆளுநர்**

---

ராஜ்பவன், சென்னை – 22 ஒம்/-

நாள்:14.08.2020 கூடுதல் இயக்குநர் (ம.தொ)

**Press Release No.76** **Date:14.08.2020**

## HON'BLE GOVERNOR THIRU. BANWARILAL PUROHIT'S MESSAGE ON INDEPENDENCE DAY

On the joyous occasion of 74th Independence Day, I extend my heartiest greetings and best wishes to the people of Tamil Nadu for the good health and glorious future.

The India of today is on a proud forward march in the comity of nations. The nation is self-reliant and is respected all over the world for its political leadership, economic growth, deep cultural roots and social cohesion.

On this occasion, let us pay tributes to all those brave souls who suffered and sacrificed for the noble cause of our country's freedom from British rule. Let us express our gratitude to all those who enabled our country to move forward on the path of progress.

Let us resolve unto ourselves, on this Independence Day, to contribute all our might for the sake of the nation with true dedication and spirit of service. May patriotism fill our thoughts and care and concern for our people dominate our hearts.

**BANWARILAL PUROHIT**
**GOVERNOR OF TAMIL NADU**

---

Raj Bhavan, Chennai -22 Sd/-
Date:14.08.2020 Addl. Director (PR)